# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2006 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, தர்மாயதனா பாதுகாப்புச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2006 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2006, திசெம்பர் மாதம் 22 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 10.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2006 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க தர்மாயதனா பாதுகாப்புச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2006 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

*ச.வ.ஒ.(கூட்டி) 13/2005*

### தர்மாயதனா பாதுகாப்புச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

முன்னுரை.

"தர்மாயதனா பாதுகாப்புச் சங்கம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர், இலங்கை, கொழும்பில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் ;

அத்துடன் சொல்லப்பட்ட சங்கம் எப்பல்வேறு குறிக் கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அவ் விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2006 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, தர்மாயதனா பாதுகாப்புச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

தர்மாயதனா பாதுகாப்புச் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தர்மாயதனா பாதுகாப்பு சங்கத்தின் தற்போதைய உறுப்பினர் களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "தர்மாயதனா பாதுகாப்புச் சங்கம்" என்ற பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும், அத்துடன் அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக் கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) தேசிய, மத கலாச்சார நடவடிக்கைகளின் அபிவிருத்திக்கும் ஊக்குவிப்புக்குமான செயற்றிட்டங்களைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும் ;

(ஆ) தர்மாயதனவைப் பேணுதல், அபிவிருத்தி செய்தல், பராமரித்தல், அத்துடன் கொழும்பு பௌத்தாலோக மாவத்தையிலுள்ள அவுக்கண புத்தபெருமானின் சிலையைப் பாதுகாத்தலும் பேணுதலும் ;

(இ) பௌத்த தத்துவத்தையும் வாழ்க்கைமுறையையும் பாதுகாத்தலும் அவற்றைப் பேணி வளர்த்தலும் ;

(ஈ) வெள்ளவத்தை, போதிறுக்காராம வீதி 48 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள "லக்விரு செவன" இல்லத்தைப் பேணுதல் ;

(உ) வறியவர்கள், ஆதரவற்றவர்கள், அங்கவீனர் மந்த போசனையான பௌத்த சிறுவர்கள் ஆகியோருக்கு உதவிசெய்தல் ;

(ஊ) தலைநகரிலுள்ள பௌத்த மதகுருமாருக்கும் பொது நிலையினருக்கும் ஓய்விடம் அளித்தல் ;

(எ) புத்தக சாலையையும் நூலக சேவைகளையும் தாபித்தலும், பேணுதலும் ;

(ஏ) சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் பௌத்த அறநெறி பிரசங்கங்களையும் கலந்துரையாடல்களையும் நடாத்துவதுடன், அவற்றை இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக ஒலி, ஒளிபரப்புதலும் ;

(ஐ) தேசிய மற்றும் மத அபிவிருத்திக்கு விரும்பத்தக்க சிங்களம், தமிழ், ஆங்கிலம், மற்றும் வேறு மொழிகளிலும் நூல்கள், சஞ்சிகைகள், மற்றும் துண்டுப்பிரசுரங்களை வெளியிடுதல் ;

(ஒ) புராதனப் பொருட்களையும் வீரர்களின் நினைவுச் சின்னங்களையும் பேணுதல் ;

(ஓ) பௌத்தர்களான அனாதரவான, முதுமையடைந்த நோயாளிகளுக்கு சமூக நலன்புரி நிலையங்களைத் தாபித்தலும் பேணுதலும் ;

(ஔ) பௌத்த குருமாருக்கும், அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும், கணனி மற்றும் ஊடகப் பயிற்சி, நிலையங்களைத் தாபித்தல் ;

(க) பௌத்தர்களான அனாதரவானவர்களுக்கும் வறிய வர்களுக்கும் தொழிற்பயிற்சியை வழங்க தொழிற் பயிற்சி நிலையத்தைத் தாபித்தலும் பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களையும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களையும் பௌத்த சிறுவர்களுக்கு தாபித்தலும் ; அத்துடன்

(ங) இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள வேறு பௌத்த ஒழுங்கமைப்புகளுடனும் சமூகசேவை ஒழுங்கமைப்புகளுடனும் நட்புறவுகளைத் தாபித்தல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம், கட்டுப்பாடு, நிருவாகம் என்பன இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க ஆக்கப்படவுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிக ளுக்கிணங்கவும் தெரிவுசெய்யப்படும் அத்தகைய எண்ணிக்கை யிலான பதவிதாங்குநர்களைக் கொண்ட நிருவாகப் பேரவை (இதனகத்துப் பின்னர் "பேரவை" என அழைக்கப்படும்) ஒன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பேரவையானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்று பதவிதாங்கும் சங்கத்தின் பேரவையாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் முரணாக எது எவ்வாறிருப்பினும் தர்மாயதனவின் தாபகர் சங்கைக்குரிய எல்லே குணவங்ச தேரர் கூட்டுத்தாபனத்தின் தவிசாளராதல் வேண்டும்.

உறுப்பினர் பெயர்ப் பதிவேடு.

**5.** பேரவை உறுப்பினர்களின் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும் இதில் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்தின் உறுப்பினர்களாகவுள்ள ஒவ்வோராளும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவராக முறைப்படி சேர்த்துக்கொள்ளப்படும் தமது பெயரை பதிவு செய்வித்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**6.** இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைய கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு எவையேனும் காணிகளையும், கட்டிடங்களையும் கொள்வனவு செய்தல், வாடகைக்கு எடுத்தல், கட்டிடங்களைக் கட்டுதல் அல்லது ஏதேனும் வகையில் கொள்ளுதல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக பணத்தைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு செலாவணிப் பத்திரங்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறேதேனும் கைமாற்றத்தகு ஆவணங்களைச் செய்வதற்கும், வரைவதற்கும், பொறுப்பேற்பதற்கும், தரகு கொடுப்பதற்கும், புறக்குறிப்பிடுவதற்கும், வாங்கவும், விற்கவும் விநியோகிக்கவும் அத்துடன் வங்கிக் கணக்குகளைத் திறக்கவும், நடைமுறைப் படுத்தவும், பேணவும், அத்துடன் முடிவுறுத்தவும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத நிதிகளை, பேரவை பொருத்தமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்வதற்கும் ;

(உ) சந்தாப்பணங்கள், கொடை, நன்கொடை, எல்லா வகையான அன்பளிப்புகள் என்பவற்றைக் கோருதலும் பெற்றுக் கொள்ளுதலும் ;

(ஊ) எவரேனும் ஆளுடன், கம்பெனியுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளல் ;

(எ) ஏதேனும் காணியை அல்லது ஆளுக்குரிய ஆதனத்தைப் பாதிக்கும் ஏதேனும் சட்டபூர்வமான நம்பிக்கைப் பொறுப்புக்களையும் நிபந்தனைகளையும் பொறுப்பேற்றல், ஏற்றுக்கொள்ளல், நிறைவேற்றுதல், புரிதல் ; அத்துடன் நிர்வகித்தல்

(ஏ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர் களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், விலக்கு தல் அல்லது அவர்களது சேவையை முடிவுறுத்தல் கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவா றான அத்தகைய வேதனங்கள், படிகள், பணிக்கொடை கள் போன்றவற்றை அவர்களுக்கு வழங்குதல்;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் ஆளணியினருக்குப் பயிற்சி யளித்தல் ; அத்துடன்

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதில் உசிதமான, இடைநேர்விளைவான அல்லது அவசிய மானவாறான அத்தகைய வேறு கருமங்களைச் செய்தல்.

**7.** (1) ஏதேனும் பொதுக் கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக் களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப்பெரும்பான்மை கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடு களுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :— கூட்டுத்தாபனத் தின் விதிகள்.

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், ஒவ்வொரு வகுப்பினரையும் சேர்ந்த உறுப்பினர்களால் செலுத்தப் படற்பாலனவான கட்டணங்கள் அத்துடன் உறுப் பினர்களைச் சேர்த்தல், அவர்களை விலக்குதல் அல் லது அவர்கள் பதவி விலகுதல் ;

(ஆ) பேரவையின் பதவிதாங்குநர்களைத் தெரிவுசெய்தல், பதவிவிலகல் அல்லது பதவி வறிதாதல் அல்லது பதவியிலிருந்து அகற்றுதல் அத்துடன் அவர்களது தத்துவங்கள் அத்துடன் பணிகள், கடமைகள் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர் கள், சேவையாளர்கள் என்போரின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் மற்றும் நடத்தை ;

(ஈ) கூட்டுத்தாபனத்தினதும் பேரவையினதும் கூட்டங் களைக் கூட்டுவதில் பின்பற்றப்படவேண்டிய நடை முறையும், கூட்டநடப்பெண் அதில் அலுவல்களை நடாத்துதல் என்பனவும் ;

(உ) பேரவையினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப் பாண்மைக்கான தகைமையும், தகைமையீனமும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்கும், அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும்.

(2) கூட்டுத்தாபனத்தின் விதிகள் அதேபோன்ற கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதியொன்று ஆக்கப்படும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**8.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்துக்காகவும் கூட்டுத்தாபனத்தின் கணக்காலும் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, இறுதி விருப்பாணவக் கையளிப்பு அல்லது கட்டணங்களாக இதற்கு முன் பெறப்பட்ட அல்லது இதன்பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் பேரவையால் தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் ஏதேனும் செலவினத்தை ஈடுசெய்வதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத் தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தின் புனரமைப்பிற்கெனவும் மேம்பாட்டிற்கெனவும் அபிவிருத்திக்கெனவும் கூட்டுத்தாபனம் ஏதேனும் தேய்மான நிதியத்தை, ஒதுக்கீட்டை அல்லது கடனாழ் நிதியத்தை உருவாக்கலாம்.

(4) கூட்டுத்தாபனத்தின் பணமும் ஆதனமும் அவை எத்தன்மையினதாகப் பெறப்பட்டிருப்பினும் அதன் குறிக்கோள்களை ஊக்குவிப்பதற்காக மாத்திரமே பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன் பாகம் எதுவும் கூட்டுத்தாபனத்தின் எவரே

னும் உறுப்பினருக்குப் பங்கிலாபங்கள், மிகையூதியம் அல்லது வேறுவகையில் இலாபம் என்றவகையாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவின்றியோ செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

**9**. *(1)* கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும். *கணக்குகளும் கணக்காய்வும்.*

*(2)* கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

*(3)* கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

*(4)* இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது

(i) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*சங்கத்தினால் செலுத்தப்பட வுள்ளனவும் சங்கத்திற்குச் செலுத்தப்பட வுள்ளனவுமான கடன்கள்.*

**10.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்திற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப் படுதலும் வேண்டுமென்பதுடன் அந்நாளன்று சங்கத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**11.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, அல்லது குத்தகை அல்லது இறுதிவிருப் பாவணக் கையளிப்பின்மீது அல்லது அதன் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத் தின் நோக்கங்களுக்காகவும் இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட அப்போதைய விதிகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக் கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள அல்லது பொறுப்பிக்கவுமுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**12.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, பேரவையின் உறுப்பினர் ஒருவரினதும் செயலாளரினதும் அல்லது பேரவையினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஆளினது முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அப்படி கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்ப மிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*உறுப்பினரின் பொறுப்பை வரையறுத்தல்.*

**13.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாபனத் தின் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்திற்காக அல்லது வேறேதேனும் நோக்கத்திற்காக அவரி

னால் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படற்பாலதான ஆண்டு ஒப்பப் பணத்தொகையை விஞ்சுகின்ற ஏதேனும் உதவு தொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*கூட்டுத்தாபனம் கலைக்கப்படுதல் அல்லது ஒடுக்கப்படுதலின் மீது எஞ்சியுள்ள ஆதனம்.*

**14.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மீது அதன் எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால், அது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தலை அதன் விதிகளின் மூலம் தடை செய்கின்றதுமான நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங்களுக்கு கொடுக்கப்படுதல் அல்லது மாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்கு உடன்முன்னர் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**15.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**16.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்